பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 17 திங்கட்கிழமை (03.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 279

# காணாமற்போனோர் தொடர்பாக ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல்

## அரசு மீது சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி

கொழும்பு, செப்ரெம்பர் 03

நாட்டில் பலவந்தமாகக் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக, அரசுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விதத்தில் ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

'காணாமற்போனோரைத் தேடியறியும் குழு' இது தொடர்பான முன் முயற்சிகளை எடுக்கும் என அக்குழுவின் அமைப்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அறிவித்திருக்கின்றார்.

நேற்று இக்குழுவின் சார்பில் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்விடயத்தை கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அறிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஒன்று கூறினார். இப்போது வேறொன்று செய்கிறார்.

காட்டுக்குப் போய், புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசியாவது நாட்டுக்குச் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று அப்போது கூறினார் அவர்.

ஆனால் இப்போது இந்த நாட்டின் ஒரு பகுதி பிரஜைகள் மீது ஒரு பெரும் யுத்தத்தை அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார். ஒரு மக்கள் கூட்டத்தையே அவர் அழிக்கின்றார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மக்களை வேட்டையாடும் அதிகாரத்தை யாரும் கொடுக்கவில்லை. அவர் வெறும் சிவில் அதிகாரி மட்டுமே.

ஈராக்கில் படை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவமும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் அகதி முகாமிலிருந்து 200 ஈழத்தமிழரைக் காணோம்!

இராமேஸ்வரம்,செப். 3

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த இரு நூறு அகதிகள் காணாமற்போயிருக்கின்றனர்.

மண்டபம் முகாமில் நேற்றுத் திடீரெனத் தாம் மேற்கொண்ட கணக்கெடுப்பை அடுத்தே இது தெரியவந்திருப்பதாக 'கியூ' பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

2006 ஜனவரிக்குப் பின்னர் இலங்கையில் மோசமான இன யுத்தம் வெடித்ததை அடுத்து இதுவரை 20 ஆயிரத்து 112 அகதிகள் தமிழகம் வந்திருந்தனர்.

அவர்களில் 4 ஆயிரத்து 300பேர் மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐவர் கொண்ட முழுக் குடும்பமுமே உயிர் அச்சுறுத்தலுக்குப் பயந்து சரண்!

### யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

யாழ்ப்பாணம்,செப்.3

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த குடும்பம் ஒன்று உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் சரண் அடைந்துள்ளது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக அறுபதுக்கு மேற்பட்டவர்கள் ஆணைக்குழுவில் யாழ். அலுவலகத்தில் இதுவரை சரண் அடைந்துள்ளனர். தனிநபர்களாகவே அவர்கள் சரண் அடைந்து வந்தனர்.

எனினும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் ஒரேயடியாக சரண் அடைந்தமை இதுவே முதல் தடவையாகும்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கதிரவேல் குமாரசாமி (வயது - 36), அவரது மனைவி சிறிலதா (வயது - 30), அவரது பிள்ளைகளான துளசிகா (வயது - 13), குணசீலன் (வயது - 10), திலக்சனா (வயது - 3) ஆகியோரே சரண் அடைந்தவர்களாவர்.

அவர்கள் இன்று யாழ். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்படவுள்ளனர்.(அ-1)

## நல்லூர்த் திருவிழாவை ஒட்டி

## விமானப் படையினர் இன்று தொடக்கம் விசேட பயணிகள் சேவையை ஆரம்பிப்பர்

கொழும்பு,செப்.3

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாவில் பக்தர்கள் பங்குபற்ற வசதியாக விமானப் படை இன்று முதல் பயணிகள் விமான சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பாக கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் எடுத்துக் கூறியதையடுத்து ஜனாதிபதி இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

பக்தர்கள் யாழ்ப்பாணம் சென்று வர வசதியாக விமான சேவையை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி விமானப் படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் -

இரு வழிப் பயணக் கட்டணமாக 6 ஆயிரத்து 800 ரூபா அறவிடப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசுப் படைகள் வசம் சிலாவத்துறை கடும் சமரின் பின் வீழ்ந்ததாக அறிவிப்பு

கொழும்பு,செப்.3

மன்னாருக்குத் தெற்கேயுள்ள கடற்கரையோரப் பிரதேசங்களான அரிப்பு மற்றும் சிலாவத்துறையை கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற கடும் சண்டையின் பின்னர் புலிகளிடமிருந்து தாங்கள் மீட்டிருக்கின்றனர் என அரசுப் படையினர் அறிவித்திருக்கின்றனர்.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள முருங்கன் இராணுவ முகாமிலிருந்தும், புத்தளத்துக்கு வடக்கே உள்ள கஜூபாம் இராணுவ முகாமிலிருந்தும் சனியன்று ஆரம்பிக்கப்பட்ட பெரும் படைநகர்வை அடுத்தே கடற்புலிகளின் தளம் அமைந்திருந்த சிலாவத்துறையை அரசுப் படைகள் கைப்பற்றின என்று அறிவிக்கப்படுகின்றது.

கடற்புலிகளின் தளத்திலிருந்து மூன்று படகுகளையும், ஆள்களுக்கு எதிரான மிதிவெடிகள் பலவற்றையும் படைத்தரப்பு மீட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட புதிய பிரதேசத்தில் தங்களின் நிலைகளை ஸ்திரப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

### புலிகள் பிரதேசத்துடன் நேரடித் தொடர்புடையதல்ல

படையினர் புதிதாகக் கைப்பற்றியிருக்கின்றனர் என்று கூறப்படும் சிலாவத்துறை மற்றும் அரிப்புப் பகுதிகள் வன்னியில் - மன்னார் மாவட்டத்தில் - புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதான நிலப்பரப்புடன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பசுந்தென்றல் கிளைமோர் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 12ஆக உயர்வு

### செஞ்சிலுவை உதவியுடன் நேற்றுச் சடலங்கள் மீட்பு

மன்னார்,செப்.3

சிலாவத்துறை, பசுந்தென்றல் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக, இடம்பெயர்ந்த மக்கள் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று கொண்டிருந்த வேளை பசுந்தென்றல் என்னும் இடத்தில் ஆழ ஊடுருவும் படையினர் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களும் முருங்கன் வைத்தியசாலை டாக்டர் எஸ்.பிரேமானந்தன் தலைமையிலான வைத்திய குழுவினரும் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

### வாகனத்திற்குள் கிடந்த 11 சடலங்கள்

சம்பவ இடத்தில் தாக்குதலுக்கு இலக்கான 'டொல்பின்' ரக வாகனத்திற்குள் இருந்து 11 சடலங்களை மீட்டனர்.

ஊதிப்பெருத்த நிலையிலும் கருமை நிறமாக மாறிய நிலையிலும் மூன்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் நானாட்டானில் தஞ்சம்

மன்னார்,செப்.3

மன்னார், சிலாவத்துறையில் படையினர் மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதல் காரணமாக அங்குள்ள பல கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நானாட்டானில் உள்ள பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

முசலி, கூளாங்குளம், அகத்திமுறிப்பு, போநொச்சிக்குளம், பொற்கேணி உட்பட மற்றும் சில சிறு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 700 குடும்பங்கள் நானாட்டான் பாடசாலையில் தங்கியுள்ளன. அவர்களுக்குத் தேவையான உதவிகளை மன்னார் செயலகம் வழங்கி வருகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைத்து உரிய வசதிகளை அளிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நானாட்டான் பிரதேச செயலகத்தில் அரச அதிபர் எஸ்.நிக்கலஸ்பிள்ளை தலைமையில் கூட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

முதலாவது கூட்டத்தில் மன்னார் ஆயர் அதிவண ராயப்பு ஜோசப் மற்றும் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அதன்பின் நடந்த கூட்டத்தில் படை அதிகாரிகளும் பங்குபற்றினர்.

மக்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து கூட்டங்களில் ஆராயப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
31 . 01 . 1975



ஆண்டவன் அடியில்
14 . 09 . 2006

## மயில்வாகனம் சற்குணரத்தினம் (சிவா)

திதி: 03.09.2007

வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிகாணத் துடித்த - எம்
ஆருயிர் வீர மகனே!
உம் கனவுகள் இலட்சியங்கள் யாவும்
பாதியிலே கரைந்ததன் காரணம் தான் என்ன?
அன்பான உள்ளமும் பாசமான அரவணைப்பும்
வீரமான செயலும் உம்மில் நிறைவாகவே கண்டோம்
உம் பிரிவு தாங்க முடியாமல் எமதுள்ளம் தவிக்கின்றது
இன்றோடு ஆண்டொன்று ஆகிவிட்டது - இவ்வாறு
ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும்
ஆறாது எம் துயரம்! நீங்காது என்றும் உன் நினைவுகள்!

*கலாமன்ற வீதி,*
*மானிப்பாய் கிழக்கு,*
*மானிப்பாய்.* (64461)

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சங்கரன் செல்லன்

கைதடி மத்தி, குமரநகரைச் சேர்ந்த சங்கரன் செல்லன் நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் - சடைச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - சின்னன் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, யோகம், பொன்னம்மா, கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சங்கரப்பிள்ளை (கச்சேரி - யாழ்ப்பாணம்), தவமணி, வடிவேலு (பிரான்ஸ்), தங்கராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், சின்னையா, கலாதேவி(பிரான்ஸ்), சிவஞானவதி(ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனும் சுகந்தன் (நோர்வே), நிமலன் (பிரான்ஸ்), பிரணவரூபன் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), லலிதா (ஜேர்மனி), தயாபரன் (மலேசியா), அனோசன் (பிரான்ஸ்), ஆர்த்திகா (பிரான்ஸ்), மகாருதி (ஜேர்மனி), மாதங்கி (ஜேர்மனி), பகீரதன், லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊற்றலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரநகர்,*
*கைதடி மத்தி.* (சி/53540)

தகவல்:
செ.சங்கரப்பிள்ளை (மகன்).

## வல்லிபுரம் வேலுப்பிள்ளை நடராஜா



திருநெல்வேலியைட் பிற[illegible]க் கொண்ட வேலுப்பிள்ளை நடராச நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சரவணமுத்து - நல்லம்மா தம்பதியினரின் மருமகனும் சுந்தரவல்லி, ஜெயந்தினி, சிவானந்தன், சுயேந்தினி, கோகுலதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதாஸ் (சுவிஸ்), ஆதவன் (பிரான்ஸ்), மதிமாறன் (பிரசன்னா உணவகம், சிவன்வீதி, திருநெல்வேலி) ஆகியோரின் மாமனும் சந்தியா, சிவ்ராஜ், மோனாலி ஆகியோரின் பேரனும் கனகம்மா, சுப்பிரமணியம், முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.09.2007) திங்கட்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், [illegible]கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி வடக்கு.* (64462)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சந்தியா பத்தலோமை (அட்டை சம்மாட்டி)



விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியா பத்தலோமை நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை விடத்தல்தீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக்கணவரும் டக்கிளஸ், லதா (விடத்தல்தீவு), விஜிதா, செல்வி கிறிஸ்ரி (மன்னார்), மீனா, துரையப்பா, உதயமேரி (பிரான்ஸ்), நியூட்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சேவியர், றெஜினோல்ட், ஜெயவதி, சூட்டி, சந்திரன்(பிரான்ஸ்), அலோமா, சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் விடத்தல்தீவில் இன்று (03.09.2007) திங்கட்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கடற்கரை வீதி,*
*நாவாந்துறை தெற்கு, யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்.

# இந்து பண்பாட்டியல் நூல் வெளியீடு

நல்லூர்,செப்.3

இலக்கியகலாநிதி க.சிவராமலிங்கம் பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவு தினமும் 'இந்து பண்பாட்டியல்' நூல் வெளியீடும் நேற்று கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத பீடத்தில் (வேதாந்த மடம்) நடைபெற்றன.

ஓய்வுபெற்ற சமஸ்கிருத பேராசிரியர் வி.சிவசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீ சிவகுருநாத பீடத்தின் 8ஆவது குரு பீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகர சுவாமிகள் நிகழ்த்தினார்.

வேதாந்த மடத்தின் தலைவர் க.கனகரத்தினம், யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். (202-111)

# காணவில்லை

பருத்தித்துறை வீதி, நல்லூர்(றியோ கிறீம் கவுஸ் அருகில்) வசிக்கும் எனது வளர்ப்பு நாயை (கறுப்பு நிறம்) நேற்று (02.09.2007) முதல் காணவில்லை. கண்டவர்கள் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0777747095, 021 222 2084, 021 4590958

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் தருமராசா

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தருமராசா நேற்று (02.08.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் தம்பதியரின் செல்வப் புதல்வனும் அமரர் செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநாயகமலரின் அன்புக் கணவரும் மயூரனின் தந்தையும் மதனகல்யாணி, மகேந்திரராசா, ரவீந்திரன், கணேசமூர்த்தி, கேசலர் ஜீவகாருண்யமூர்த்தி, குணசுந்தரி, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகதேவி, செல்வநாயகசோதி, செல்வநாயகதாசன் ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சத்தியரூபினி, சாதராம்பிகை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வாகையடி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
விக்னேஸ்வரன்
(சகலன்).

# இன்று

யாழ்ப்பாணம்,செப்.3

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சனசமூக விழிப்புணர்வுச் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் எஸ்.காந்தரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மிதிவெடி மற்றும் ஏனைய வெடிப்பொருள்களால் பாதிப்புற்றோருக்கான இணைப்பாளர் ம.சேரன்செங்குட்டுவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

* * *

கோப்பாய் இந்து இளைஞர் கழகமும் கோப்பாய் அறிவாலயம் கல்வி நிறுவனமும் இணைந்து இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு அறிவாலயம் கல்வி நிறுவனத்தில் இரத்ததான முகாம் ஒன்றை நடத்தவுள்ளன.

இம்முகாமில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்ய விரும்புவோர்களை பங்குகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (1-202)

# சிங்களக் கிராமம் மீது மோட்டார் தாக்குதல்

கொழும்பு,செப்.3

வவுனியா மாவட்டத்தில் வெலி ஓயாவில் ராணுவ பாதுகாப்புடன் விளங்கும் சிங்களக் கிராமமான தொவெட்டுனுவெவ சிங்களக் கிராமத்தின் மீது மூன்று தடவைகள் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஒரு மோட்டார் குண்டு மாத்திரமே வெடித்ததாகவும் எவரும் காயமுறவில்லையென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பாதுகாப்பில் திருப்தி யில்லையென்று கிராமவாசிகள் கூறினார்கள். 1980ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் தாங்கள் குடியேற்றப்பட்டதிலிருந்து கிராமத்தை தீவிரவாதிகளிடமிருந்து தாங்களே காப்பாற்றி வருவதாக கிராமவாசிகள் கூறுகின்றார்கள். (ப)


Admissions Open September 2007

COMPUTER COURSES

New Batches Start on :

| | | |
|---|---|---|
| Batch 1 [ Weekday ] | 14.09.2007 | at 10.00 A.M. |
| Batch 2 [ Weekend ] | 15.09.2007 | |
| Batch 3 [ Weekend ] | 23.09.2007 | |
| Batch 4 [ Weekday ] | 24.09.2007 | |

**Diploma in Office Applications – 3 Months**
- Introduction to Information Technology
- Microsoft Excel 2007
- Microsoft PowerPoint 2007
- Microsoft Word 2007
- Microsoft Access 2007
- Implementation Project

Course Fee : 2500/-

**Diploma in Internet Engineering – 4 Months**
- Introduction to Information Technology
- Multimedia and Internet Technology
- Data Communications and Networking
- Internet Engineering Implementation - Project
- Internet Science
- Website Management
- Advanced Website - Management

Course Fee : 3500/-

**Diploma in Software Engineering – 4 Months**
- Introduction to Information Technology
- System Analysis and Design
- Data Analysis and Database Design
- Software Engineering Implementation - Project
- Introduction to Programming
- Visual Programming
- Software Engineering - Techniques

Course Fee : - 4250/-

**Diploma in Hardware Engineering – 4 Months**
- Introduction to IT
- Computer Platforms
- Computer Networking
- Multimedia
- Troubleshooting PC Hardware
- Troubleshooting Software
- Preventive Maintenance
- Hardware Engineering Implementation Project

Course Fee : 4250/-

உங்கள் எதிர்காலத்திற்கு
ஓர் தக்க முதலீட்டைத் தேடிக்கொடுக்கின்றது.

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
Email : iisce@sltnet.lk Web: iiscitycampus.net


# கண்ணீர்க் காணிக்கை

## திருமதி ரஜிந்தினி குகேஸ்சன் (வவா)



*உன் அகத்து நோய்மாற உலகத்து*
*கோயில் எல்லாம்*
*பற்பல நேர்த்திகள் பண்ணி நின்றோம் நாம்*
*கள்ளகத்து இல்லா உந்தன் கனி முகம்*
*வாடும் என்று கனவிலும் நாம் கண்டதில்லை*

*பஞ்சிற்படு த் பேசல் பற்றி எரிகிறது மனம்*
*பக்கத்தில் இருந்தால் பார்த்து ஆறி[illegible]லாம்*
*அன்னிய நாட்டில் நீ அக்கினியில் சங்கமிக்க*
*அக்கா நீ எமக்கில்லை யென எண்ணுகையில்*
*சித்தப் பிரமையில் சிதைகின்றது எம் இதயம்*

*வையகத்து வந்த உயிர் தெய்வத்தை சென்றடைந்தால்*
*பொய்யாய் போயிருக்கும் பிண்டத்தைப் போற்றாமே*
*பொறியற்ற உந்தன் புந்திக்கு எஞ்ஞான்றும்*
*போகமாம் முத்தி பெற போற்றிடுவோம்*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*'காசில்'*
*பருத்தித்துறை வீதி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (64460)

S.K.கிருபா குடும்பம்
(தம்பி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் நிலையம் அமைக்க சீன நிறுவனம் பின்னடிப்பு

## இப்போது சுன்னாகத்தில் ஐந்து மின் பிறப்பாக்கிகள்

யாழ்ப்பாணம், செப். 3

குடாநாட்டில் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க முன்வந்த சீன நிறுவனம் ஒன்று, பின்னர் தனது ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டது.

சீனாவைச் சேர்ந்த யூரோ ஏசியா மற்றும் பவுண்டி குறூப் ஆகிய நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க விண்ணப்பித்திருந்தன.

அவற்றில் யூரோ ஏசியா என்ற நிறுவனம் மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சுன்னாகத்தில் பணிகளையும் ஆரம்பித்துள்ளது. பெரும்பாலும் நவம்பர் மாதமளவில் அந்த நிறுவனம் மின் உற்பத்தியை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் அடுத்த நிறுவனமான பவுண்டி குறுப் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க இப்போது மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மீளவும் கேள்விகளை கோர மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

*5 மின் பிறப்பாக்கிகள்*

இதே வேளை - மின் வெட்டு நேரத்தைக் குறைக்கும் நோக்குடன் மின்சாரசபை ஐந்து மின்பிறப்பாக்கிகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்துள்ளது. அவற்றில் மூன்று மின் பிறப்பாக்கிகள் கடந்த வாரம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளன. ஏனையவை இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் இயங்கும் என்று மின்சாரசபை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

மூன்று மின்பிறப்பாக்கிகளும் இயங்க ஆரம்பித்ததும், மின்வெட்டு நேரம் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. மற்றைய இரண்டும் இயங்க ஆரம்பித்ததும் மின் வெட்டு நேரம் மேலும் குறைக்கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)



மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம் கனடா - மாதகல் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் நடத்திய கல்வியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவில் சபா. அருள் சுப்பிரமணியம் எழுதிய சிறுவர் பாடல்கள் அடங்கிய தமிழ் மலர் நூல் வெளியீடும் இடம்பெற்றது. யாழ். அரசினர் போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் இளங்கோ (ஞானியார்) இதன் முதல் பிரதியை மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியால அதிபர் வி.சுப்பிர மணியத்திடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: வலி. தென்மேற்கு செய்தியாளர்)

# யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் மாணவருக்கு முதலுதவி வழங்கத்திட்டம்

யாழ்ப்பாணம், செப். 3

வேறுபாடற்ற பராமரிப்புடன் பாதுகாப்பான, நோயற்ற சமூகத்திற்கான முதலுதவி என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 8ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையினரால் பெரிய அளவில் பயிற்சி வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக; ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 25 மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இளைய முதலுதவிப்பயிற்சி செஞ்சிலுவைச் சங்க முதலுதவிப் பயிற்சியாளரினால் வழங்கப்படும்.

அவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிப் பொருள்கள், சிற்றுண்டி பொருள்கள் வழங்கப்படும்.

இளவாலை கன்னியர்மடம் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமையும் யாழ், புனித ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் புதன்கிழமையும் வட்டு. மத்திய கல்லூரியில் வியாழக்கிழமையும் ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரியில் சனிக்கிழமையும் காலை 9-12 மணிவரை பயிற்சி நடைபெறும்.

இம்மாணவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தலைமையகத்தில் ஒன்றுகூடி செஞ்சிலுவைச் சங்க பரப்பு கூட்டம் ஒன்றில் பங்குபற்றுவர்.

அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படும். ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும் நான்கு முதலுதவி நாடகங்களை ஒவ்வொன்றும் 30 நிமிடத்திற்குள் நடித்து காட்டுவார்கள்.

இந்த நான்கு பாடசாலைகளுக்கும் முதலுதவி பெட்டி, செஞ்சிலுவைச் சங்க முதலுதவிக்கொடி அன்பளிப்புச் செய்யப்படும். இதற்காக குறிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு ஆவண செய்யப்பட்டுள்ளது. (203)

# காசநோயாளர்களுக்கு சத்துணவு வழங்க சிவபூமி அறக்கட்டளை நிதியுதவி

யாழ்ப்பாணம், செப். 3

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிதியத்தினர், பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறும் காச நோயாளர்களுக்கு சத்துணவு வழங்கவென 15 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளனர். இத்தகவலை காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி நோயாளர்களுக்கு சமபோஷ சத்துணவும், விற்றமின் மருந்துகளும் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை -

கொழும்பு இராமகிருஷ்ண சமித்தியினரும் காசநோயாளர்களுக்கு வழங்குவதற்கென சமபோஷ சத்துணவை அனுப்பி வைக்கின்றனர். அவை நோயாளர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படுகின்றன எனவும் டாக்டர் தெரிவித்தார். (202)

## உள்ளூராட்சி சபையின் மத்தியதர அலுவலருக்கு ஆங்கிலக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை மத்தியதர அலுவலர்களுக்கு சான்றிதழ்களுக்கான ஆங்கில கற்கைநெறி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவன முகாமைத்துவ ஆலோசகர் ஏ.ஓ.சற்.மௌலானா இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு அனுமதி பரீட்சை நடத்தப்பட்டு அவர்களின் தராதரங்களுக்கு ஏற்ப கற்கைநெறி வழங்கப்படவுள்ளது. மேற்படி கற்கை நெறிகள் எதிர் வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. (203-95)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

வலி.வடக்கு,செப். 3

வளிமண்டலவியல் திணைக்களத்தில் தொலைத் தொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்பவியலாளர்பதவிக்கான இலங்கை தொழில்நுட்ப சேவையின் 2ஆம் வகுப்பின் ஆ பிரிவுக்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்ப திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என வளிமண்டலத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களை 20.07.2007 மற்றும் 31.08.2007ஆம் திகதிய அரச வர்த்தமானிகளிலும் பார்வையிடலாம்.

இப்பதவிக்கு ஜி.சீ.ஈ உயர்தர விஞ்ஞான பாடத்தில் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் [illegible] டுள்ளது. (202-86)

## சண்டிலிப்பாயில் புதிய கலாசார மண்டபம்

யாழ்ப்பாணம்,செப். 3

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் - டச்சு வீதியில் கருத்தரங்கு மண்டபமும் கலாசார மண்டபமும் அமைக்கப்படவுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு முதற்கட்டமாக இதற்கென 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை புதிய நிர்மாணப் பணிகளுக்கான ஆரம்ப வேலையினை மேற்கொண்டுள்ளது. கருத்தரங்கு மண்டபமும் கலாசார மண்டபமும் அமைப்பதற்கான காணியை சமூக சுகாதார சுற்றாடல் விவகாரசபை வழங்கியுள்ளதாக செயலாளர் இ.வல்லிபுரம் தெரிவித்தார்.

# சண்டிலிப்பாயில் உரக்களஞ்சியம் அமைக்க நிதி ஒதுக்குமாமறு அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 3

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் புதிய உரக்களஞ்சிய அறைகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அரச அதிபருக்கு அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சண்டிலிப்பாய்க்கான புதிய கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் விவசாயிகளுக்கு தேவையான உரத்தை வழங்க கூடிய உரக்களஞ்சிய அறை அமைக்கப்படவில்லை.

உரக்களஞ்சிய அறை அமைப்பதற்கான காணியை மானிப்பாய் சட்டத்தரணி இ.வசந்தசேனன் வழங்க முன்வந்துள்ளார்.

எனவே புதிய உரக்களஞ்சிய அறை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை இவ்வாண்டில் நிக்கொட் நிதியேற்பாட்டின் கீழ் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (203-95)

# தேசிய ஓய்வூதியர் தினம் ஒக்ரோபர் 5இல்; 350 ஓய்வூதியர்களுக்கு ஜனாதிபதி விருது

யாழ்ப்பாணம், செப். 3

தேசிய ஓய்வூதியர் தினம் ஒக்ரோபர் 5ஆம் திகதி நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளது. இதனை ஒட்டி ஓய்வூதியர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் ஏற்பாட்டில் அன்றையதினம் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் விழா ஒன்று நடத்தப்படவுள்ளது. இவ்விழாவில் வைத்து ஜனாதிபதி விருதை ஓய்வூதியர்களுக்கு ஜனாதிபதியே வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பும் யாழ். பிரதேச ஓய்வூதியர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை யாழ். பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேச பகிரங்கசேவை நம்பிக்கை நிதியத் தலைவர் ஸ்ரீ சத்திவேல் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசத்திலிருந்து ஜனாதிபதி விருதுக்காக விண்ணப்பிக்கவிரும்பும் ஓய்வூதியர்கள் "சுபா சுப்பிரமணியம், தலைவர், நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன் புரிச் சங்கம், 906/23, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாமென நல்லூர் தொகுதி ஓய்வூதியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (202)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு மல்லாகம் நீதிமன்றம் 12 ஆயிரம் ரூபா அபராதம்

வலி. வடக்கு, செப். 3

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் 12 ஆயிரத்து அறுநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சங்கானை மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் இரு வருக்கும் இந்த அபராதத்தை விதித்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த ஆசீர்வாதம் அன்ரன் என்பவருக்கு 7 ஆயிரத்து ஐநூறு ரூபாவும்-

சில்லாலையைச் சேர்ந்த சிவகுரு சிவகுமார் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (203-86)

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

வலி. வடக்கு, செப். 3

நிதி திட்டமிடல் அமைச்சு இலங்கை திட்டமிடற் சேவையின் IIஆம் வகுப்பு IIஆம் தரத்திற்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப் பதவிக்கான ஆள்சேர்ப்புப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பு மட்டுப்படுத்திய ரீதியில் நடத்தப்படும்.

இப்பரீட்சைக்குத் திட்டச் செயற்பாடுத்துகை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புள்ளி விவர உதவியாளர்கள், தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்கள், கருத்திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கமுடியும்.

இவர்களைவிட மேற்கூறிய பதவிகளுக்கு சமமான திட்டமிடல் விடயங்களில் பதவிவகிக்கும்5வருட தொடர்ச்சியானசேவைக் காலத்தைக் கொண்டவர்களும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களை 31.08.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202 - 86)

* * *

நிதி திட்டமிடல் அமைச்சு, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் இலங்கை விலை மதிப்பீட்டாளர் சேவையின் வகுப்பு III தரம் IIஇன் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

[illegible] முகாமையும் விலை [illegible] விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற 18- 35 வயதுக்குட்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 31.08.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202 - 86)




## வெளிச்சம் இன்றி மக்கள் சிரமம்

குருநகர் தண்ணீர்த் தாங்கிக்கு முன்பாக அமைந்துள்ள குருநகர்மத்திய கிழக்கு வீதியில் உள்ள மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் பலகாலமாக ஒளிராமல் உள்ளன. இதனால் இவ்வீதிகளில் முன்னிரவு நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மின்குமிழ்களை ஒளிரவைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களுக்கு இப்பகுதிப் பொதுமக்கள் ஒப்பமிட்டு பல கடிதங்களை அனுப்பி வைத்தும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் தெரிவித்தனர். (203-51)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரவூர்தி உரிமையாளருக்கான அவசர வேண்டுகோள்

அரச அதிபர் அவர்களின் அவசர வேண்டுகோளுக்கு அமைவாக எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு, துறைமுக சேவைக்கு அனுமதிபெற்ற அனைத்துப் பாராவூர்திகளும் இன்று தொடக்கம் துறைமுக சேவையில் ஈடுபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் வேறு சேவையில் ஈடுபடுவதாயின் சங்கத்தின் அனுமதிபெற்று ஈடுபடுத்தப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் சேவைக்கான அனுமதி அனைத்தும் இரத்துச் செய்யப்படும். அனுமதி இரத்துச் செய்யப்பட்டால் எக்காரணம் கொண்டும் மீள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

குறிப்பு: புதிய அனுமதிப் பட்டியலில் உள்ள பாரவூர்திகளும் சேவையில் ஈடுபடலாம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

(சி-53542)

**- நிர்வாகம்.**

## மரண அறிவித்தல்



### அமரர் சின்னத்துரை சிவபாதம் A.I.B.

(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர், இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொட்டடி சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவபாதம் 01.09.2007 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சின்னத்துரை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் திருநாவுக்கரசு தம்பதியரின் மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் தவச்செல்வி (சுவிஸ்), தவறஜனி, தவவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பு. கமலேந்திரன் (சுவிஸ்), மு.ஜெ. சுஜீந்திரன் (ப.அ.சபை) ஆகியோரின் மாமனும் சு. கிர்ஷிகன், க. கோபிகன், க. பைரவி ஆகியோரின் பேரனும் கந்தசாமி, சற்குணராசா (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), மகேஸ்வரி (பாஹ்ரின்), சிவராசா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் கோமதி, மாலதி (பிரான்ஸ்), வளர்மதி (வவுனியா), சிதம்பரநாதன் (லண்டன்), சிதம்பரேஸ்வரன் (சர்வதேசப் பாடசாலை - மானிப்பாய்), சிதம்பரராசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கீழ்க்கண்ட அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26(10), வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(64450)

தகவல்:
திருமதி சி. தேவகி,
(மனைவி).

## இதய அஞ்சலிகள்



### அருட் பணி
### B.R.F.பொனிபஸ்

(பங்குத் தந்தை, மிருசுவில்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14★05 1947 | 27 ★ 08 2007 |

வலிக்கிறது இதயம்....
வாழ்விடம் பிரிந்தோம்,
வழிபடும் ஆலயம் பிரிந்தோம்,
வழிகாட்டும் பங்குத்தந்தையே
உம்மையும் இழந்தோம்
ஆயினும் நாம் தளரவில்லை....
ஏனெனில் உம் உறுதியை
எம் மனங்களில்
சுமக்கின்றோம்.

**வாழ்க்கைக் குறிப்பு**

பெற்றோர்: வஸ்தியாம்பிள்ளை இராஜதுரை - பிறிஜெட் குணமணி

பிறப்பிடம் : கரம்பொன், ஊர்காவற்றுறை.

கல்வி: புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

குருத்துவ பயிற்சியும், கல்வியும்: பூரணவத்த சிறிய குருமடம், கண்டி.
தேசிய குருமடம், கண்டி.

குருத்துவ அபிசேகம் : 1977.10.26 - கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில்
(அப்போதைய கண்டி ஆயர் அதி வண. போல் பெரேரா அவர்களினால்)

பணித்தளங்கள்: றெற்றன், குருநகர், சில்லாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, ஆனைக்கோட்டை, இளவாலை, மிருசுவில்.

விசேட பதவிகள்:
மறைக்கோட்ட முதல்வர் - இளவாலை, மறைக்கோட்டம்.
விரிவுரையாளர் - புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி.

எம் பங்குத் தந்தைக்கு நித்தியவாழ்வருள இறையாசி வேண்டுகின்றோம்.
அவர் பிரிவால் துயருறும் அன்னைக்கும் குடும்ப உறவுகளுக்கும், யாழ்.
கத்தோலிக்க திருச்சபைக்கும் எம் அனுதாபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்:
பங்கு மக்கள்,
புனித [illegible] ஆலயம், மிருசுவில்.

(64452)

## அளவெட்டி, நாகேஸ்வரம்
## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## மகோற்சவ விஞ்ஞாபனம்

26.08.2007 - 06.09.2007



இரதேமேலேறி இனிதருள் புரியும்
சாதனே ராமா சாரங்கபாணி
பரத நாடகனே பழம் புகழ் நாகேஸ்
வரமுறை நாக வரத நாராயணனே.
(அருட் கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்)

மெய்யன்புடையீர், நிகழும் சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள் (26.082007) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 20 ஆம்நாள் (06.09.2007) வியாழக்கிழமை வரை மேற்படி உற்சவம் நிகழ்கின்றது. அன்பர்கள் அனைவரும் வந்து தரிசனம் செய்து நாகவரத நாராயணனின் திருவருளால் சுகவாழ்வு பெறுமாறு வேண்டுகின்றோம்.

### விசேட விழாக்கள்:

சப்பரம் இன்று (03.09.2007) திங்கட்கிழமை பி.ப. 5மணி
தேர் நாளை (04.09.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணி
உறியடி நாளை (04.09.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 5மணி
ஸ்ரீரங்கநாதர் பாதபூசை 05.09.2007 புதன்கிழமை பி.ப. 5மணி
தீர்த்தம் 05.09.2007 புதன்கிழமை மு.ப.11மணி
ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் 06.09.2007 வியாழக்கிழமை காலை 8.30மணி
திருக்கல்யாணம் 06.09.2007 வியாழக்கிழமை பி.ப. 2மணி

நாகேஸ்வரம், அளவெட்டி

பொறுப்புரிமைப் பரிபாலனசபை.

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்: **லிங்கன் கிறீம் ஹவுஸ்,**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(64454)

### விழிப்புணர்வு கூட்டம்

வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தில் மாதந்தோறும் அனர்த்த முகாமைத்துவக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. (135)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி மேரி வுளோறன்ஸ் யோசவ்

(தி.கு.சபை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற அருட்சகோதரி மாறி (தி.கு.ச) யோசவ்வின் சகோதரியுமான அருட்சகோதரி மேரி வுளோறன்ஸ் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு இறைபதம் சேர்ந்தார்.

இவரின் ஆன்ம சாந்திக்கான நல்லடக்கச் சடங்குத் திருப்பலி இன்று (03.09.2007) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இடம்பெறும்.

தகவல்:
அருட்சோதரி யோலன்ட்,
யா/ தி.கு.மாகாணத் தலைவி.

(64453)

### திருமதி வள்ளிப்பிள்ளை செல்லத்துரை



ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை செல்லத்துரை நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் சரவணமுத்து சின்னம்மாவின் சகோதரியும் செந்தில்நாதன், ஞானசபேசன் (கி.சே. அலுவலர் - குப்பிளான் வடக்கு ஜே/211, இணுவில் கிழக்கு ஜே/ 189), சிற்சபேசன் (ஓய்வுபெற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்), சிறீதரன் (லண்டன்), கெங்காதரன் (நோர்வே), புனிதவதி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் சந்திரகௌரி, நந்தினி (லண்டன்), வசந்தா (நோர்வே), இரங்கநாதனின் (அதிபர் யா/ அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை) பாசமிகு மாமியும் காலஞ்சென்ற மகிசன் மற்றும் கௌரீசன் (உயர்தர கணிதப் பிரிவு மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி), பிரவீனன் (நோர்வே), சஞ்சயன், சஞ்சிதா (மாணவி, யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி.), சஞ்சீவன் (மாணவன், யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி.) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை மேற்கு இல்லத்தில் இன்று (03.09.2007) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் காலை 8 மணிக்கு தனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(64455)

தகவல்:
செ. ஞானசபேசன்.
(மகன்- கிராம சேவையாளர்).

### கந்தையா கதிரேசபிள்ளை



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரேசபிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராஜா (ஓய்வுபெற்ற லிகிதர்), மீனாட்சியம்மை, பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற M.L.T.- கனடா) ஆகியோரின் சகோதரரும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் விஜயகுமாரி, சாந்தகுமாரி(சுவிஷ்), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரியதாஸ் (ஓய்வுபெற்ற தபாலதிபர், யாழ்ப்பாணம்), சிவசோதி (சுவிஷ்), சிவபாலன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் விஜயதாஸ் (Ceylinco Grameen Credit Co. Ltd.), விஜயதர்சினி, அருள்குமரன், லகினா, லவேனன், சஜீவன், ஆரணி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2007) திங்கட்கிழமை மு.ப. 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(64456)

களவாவோடை,
ஏழாலை தெற்கு.

தொ.பே.0773290591

தகவல்:
ஆ. மரியதாஸ்
(ஓய்வுபெற்ற தபாலதிபர், யாழ்ப்பாணம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டரீதியான முயற்சி பலனளிக்கவில்லை; எனவே படகுமூலம் ஈழத்திற்கு பொருள்கள்

## பழ.நெடுமாறன் விளக்கம்

சென்னை, செப்.3

ஈழத் தமிழர்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு சட்ட ரீதியாக நாங்கள் எடுத்த முயற்சிக்கு மத்திய அரசு மௌனம் சாதித்து வருகின்றது. எனவேதான் அவற்றை நாங்கள் படகுகள் மூலம் அனுப்பி வைப்பது என்கின்ற போராட்டத்தை நடத்தத் துணிந்தோம் என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருள்களுடன் படகுப் பயணம் மேற்கொள்வது ஏன் என்பது குறித்து ''ஆனந்த விகடன்'' வார இதழுக்கு விளக்கமளித்து பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணத்தில் ஐந்து லட்சம் தமிழர்களைப் பட்டினி போட்டுப் பணிய வைக்கும் கீழ்த்தரமான போர்த்தந்திரத்தை சிங்கள அரசு செயற்படுத்துகிறது. அதன் விளைவாக, ஈழத்தில் பட்டினிச் சாவுகள் அதிகரித்துள்ளன.

இந்திய அரசோ, தமிழக அரசோ இதில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. எனவே ஈழத்தில் வாடும் எங்கள் சகோதரர்களுக்காக தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் எண்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்களை ஒருங்கிணைத்து, தமிழகம் முழுக்கச் சென்று, மக்களிடம் இரண்டே மாதத்தில் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசி, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் திரட்டினோம்.

அதை ஈழத்துக்கு அனுப்ப, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடினோம். அவர்களும் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டு மத்திய அரசிடம் அனுமதி கேட்டுக் கடிதம் எழுதினார்கள். அது கண்டு கொள்ளப்படவே இல்லை.



ஜெனீவாவில் இயங்குகின்ற அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் கூட இது சம்பந்தமாக இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியது.

சட்டரீதியாக நாங்கள் எடுத்த முயற்சிக்கு மத்திய அரசு கடந்த ஏழு மாதங்களாக மௌனம் சாதிக்கிறது. இனியும் தாமதித்தால், உணவுப் பொருள்கள் கெட்டுப் போய் விடும். மருந்துப் பொருள்கள் காலாவதியாகி, யாருக்கும் பயன்படாமல் போய் விடும்.

எனவேதான், அவற்றை நாங்கள் படகு கள் மூலம் அனுப்பி வைப்பது என்கிற போராட்டத்தை நடத்தத் துணிந்தோம். இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அது பற்றிக் கவலை இல்லை என்றார் அவர். (202)


# மணவைத்தம்பி 79 ஆவது வயதில் காலமானார்

சென்னை, செப்.3

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக ஒரு காலத்தில் விளங்கியவரான மணவைத்தம்பி நேற்று தமிழ் நாட்டில் காலமானார். காலமாகும்போது அவருக்கு 79 வயது.

இளம் வயதில் கொழும்பு சினிமா தியேட்டர் ஒன்றில் பணிபுரிந்தவரான மணவைத்தம்பி இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவியவர்களில் ஒருவராவார். பிற்காலத்தில் இந்தியா திரும்பிய மணவைத்தம்பி சென்னையில வாழ்ந்து வந்தார்.

இலங்கையில் இருந்த காலத்தில் ஏனைய தி.மு.க.தலைவர்களான அண்ணாதாசன், பீர்முகம்மது போன்றவர்களுடன் இணைந்து கழகக் கொள்கைகளைப் பரப்புரை செய்வதில் ஈடுபட்டு வந்தார். கொழும்பிலும் மலையகத்திலும் சிறப்புடன் கழகப் பணிகளை அவர் மேற்கொண்டிருந்தார். (ப)



நல்லூர் உற்சவகாலத்தையொட்டி யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய சேவைப் பிரிவு நடத்திய சுகாதாரக் கண்காட்சியை மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ திறந்து வைப்பதையும் மாநகராட்சி மன்ற பிரதம சுகாதார பரிசோதகர் து.மகாதேவா காட்சிக்கு வைக்கப்பட்ட மூலிகைவகைகள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கமளிப்பதையும் படத்தில் காணலாம். படத்தில் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தாய்சேய் நல வைத்திய அதிகாரி திருமகள் சிவசங்கர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படங்கள் லக்ஸ்மன்.)

# உல்லாசப் பயணிகளைத் தடைசெய்ய எந்த நாட்டிற்கும் அதிகாரம் இல்லை

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.03

உலக மயமாக்கலின் கீழ் ஸ்ரீலங்கா அரசு கைச்சாத்திட்டிருக்கும் உடன்படிக் கைக்கு அமைய இந்நாட்டு உல்லாசப் பயணச் சேவையைப் பெறவிரும்பும் வெளிநாட்டுப் பயணிகளைத் தடை செய்வதற்கு எந்தவொரு நாட்டிற்கும் சட்டரீ தியான அதிகாரம் கிடையாது.

இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

உலக மயமாக்கல் குறித்து நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அனைத்துலகக் கருத்தரங்கில் உரையாற் றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: அனைத்துலக நாடுகளுடன் ஒப்பந்தங்களை இலங்கை மேற்கொண்டுள்ள நிலையில் சில நாடுகள் தமது நாட்டவர்களை இலங்கைக்குப் பயணிக்க வேண்டாம் என்று அறிவிக்க அதிகாரம் ஏதும் இல்லை.

உலகின் அநேக நாடுகளில் பாதுகாப்புப் பிரச்சினைகளும் பயங்கரவாதத் தாக்குதல்களும் உள்ள போதிலும் சில நாடுகள் எம்மைப் போன்ற வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளுக்கு மட்டுமே இத்தகைய தடைகளை விதிக்கின்றன.

இது நாம் கைச்சாத்திட்டிருக்கும் உடன்படிக்கைகளின் விதிகளுக்கு முரணானவை. அதனால் இலங்கை அது தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் - என்றார். (202)

# முக்கிய பிரமுகர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பைக் குறைக்க முடிவு

கொழும்பு, செப்.3

முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்புக்கு வழங்கப்படும் பொலிஸ் அதிகாரி களின் எண்ணிக்கையை குறைக்க அரசாங்கம் முடிவு செய்துள் ளது.

பொலிஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள ஆளணியின் பற்றாக்குறையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த நிலைமையை விளக்கினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை:

உளவுப் பிரிவின் புலனாய்வு அடிப்படையிலேயே முக்கிய பிரமுகர்களின் பாதுகாப் புக்கான பொலிஸாரின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். மேலதிகமாக உள்ளவர்கள் மீளப்பெறப்படுவர்.

பொலிஸ் திணைக்களத்தில் மனித வளப்பற்றாக்குறை நிலவுகிறது. குற்றச் செயல்களை கண்டுபிடிக்க போதிய பொலிஸார் இல்லை.

ஆனால், தேவைக்கு அதிகமாக பொலிஸார் முக்கிய பிரமுகர்களுடன் பணி புரிகின்றனர். பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் மட்டுமல்லாது, வேறு பணிகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர் - என்றார் அவர். (அ-1-5)

# நல்லையில் இசை அர்ச்சனை இன்று காலை

யாழ்ப்பாணம், செப்.3

நல்லைக் கந்தன் ஆலயத்தில் கார்த்திகைத் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.வழமையாக இரவு இடம் பெறும் இசையர்ச்சனை நிகழ்வு இம் முறை காலையில் இடம்பெறவுள்ளது.

கார்த்திகைத் திருவிழாவான இன்று திங்கட்கிழமை காலை 7மணி முதல் 9 மணிவரை ஆலய உள் வீதி யில் இந்த இசையர்ச்சனை நிகழ்வு இடம்பெறும்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் பதினேழாம் நாளான இன்று திங்கட்கிழமை 'ஆறுபடை வீடுகளில் அருளாசி' என்னும் தலைப்பில் சி.சசீவன் சொற்பொழிவாற்றுவார்.

வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203-79-111)

# உதைபந்தாட்ட அரை இறுதிப் போட்டி

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகம் மட்டுப்படுத்தப்பட்ட அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது.

இப்போட்டியின் அரை இறுதிப் போட்டி கழக விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கடந்த 2 தினங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கிடையேயான போட்டிகள் இன்றும் நாளையும் பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (202)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப்.3

சுன்னாகம் மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை பி.ப 2.30மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 10 திணங்கள் இடம்பெறவுள் ளது. பதினோராம் நாள் சங்காபிசேகம் இடம் பெறும். (203)

* * *

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 1008 சங்காபிசேகம் இடம் பெற்று காலை 9.45 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெறும். மு.ப 11.30 மணிக்கு சுவாமி தேரேறி வலம் வருவார். பி.ப ஒரு மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.இவ்ஆலயப் பெருந் திருவிழா கடந்த மாதம் 19ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. (203-135)

* * *

சுழிபுரம், செப்.3

தொல்புரம் மடத்துப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆவணிச்சதுர்த்தி தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

(203-28)

* * *

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய அலங்காரத்திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 15 நாள்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலய இராஜகோபுர மகாகும்பாபிசேகமும் மணிமண்டபத் திறப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறவுள்ளன.

காலை சுவாமிகளுக்கு அபிசேகம் இடம் பெறும்.தொடர்ந்து மணி மண்டபத்திறப்பு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். (203)

* * *

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய பெருந் திருவிழா கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 11மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203)

# பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

சிறப்புக் குறைவிட மே தேவா பெரும்!
மறக்குறத்தி வள்ளி மணாளா! - நிறக்கோடிகள்
ஆடும் அழகுடை ய நல்லூர் வாழ் ஆண்ட வனே
நீடும் அருள் தருவாய் நீ — யோகர் சுவாமிகள்



ஓசை ஒளியாலே ஊற்றாகும் உள்ளத்தின்
தேசையெலாம் நல்லூரிற் தேடலாம் - ஆசையினி
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாங் கந்தன் கழல்.
இறைமணி.சி.இராசரத்தினம் (அமரர்)

**நல்லூர் முருகனை நீ நாடு!**

நல்லூர் முருகனை நீ நாடு!
நாள் தோறும் அவன் புகழை நீ பாடு!
வல்வினை அறுத்திடுவான் வேரோடு!
வந்தெமைக் காத்திடுவான் வேலோடு! ........ (நல்லூர்)

சிகரமெனக் கோவில் கொண்டவனை,
செந்தமிழ்க் குமரனெங்கள் சண்முகனை,
அகத்தினில் அனுமுதினமும் நீ நினை!
அருள் தந்து காத்திடுவான் ஐயன் உனை! .... (நல்லூர்)

தந்தைக்குக் குருவாகி நின்றவனை, இந்தத்
தரணியை வலம் வந்த வேலவனை,
கந்தனை; குகனை நல்லூர் கார்த்திகேயனை
கருதி வணங்கிடில் நீங்கும் வினை! ...... (நல்லூர்)

கீழ்க்கரவை கி. குலசேகரன் (இலங்கை வங்கி, பதுளை)

**கார்த்திகை விழாவினைக் கண்டு களிப்பாம்!**

கார்த்திகை மாதர்கள் அறுவரின் அமுதினை உண்ட
கார்த்திகேயனின் நாமத்தை அனைவரும் அமர்ந்தேத்த
கூர்த்த வேலினை கையினில் எடுத்துச் சூரனை மடித்தவர்
கார்த்திகை விழாவினைக் கண்டு கண்களிப்பாம்
கவிமணி கந்தமுருகேசதாசனார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவகையுடன் வாழ்த்தி பெருமிதமடைகின்றோம்



எமது வாழ்வக மாணவரான

### அல்போன்ஸ் ஸ்ரனிஸ் அற்புதராஜ்

அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது சட்டமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில் சித்தி பெற்றதன் மூலம் எமது வாழ்வகத்துக்கும் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ளார். அத்தோடு, சட்டத்துறையில் பயின்று பட்டம்பெற்ற முதலாவது தமிழ் பேசும் விழிப்புலனற்றவர் என்ற பெருமையினையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். இவரை மனமார வாழ்த்துவதில் மகிழ்வும் பெருமிதமுமடைகின்றோம்.

**வாழ்வக சமூகம்,**
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.
(சி/53535)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில்: 19 ★ 03 1962

ஆண்டவன் மடியில்: 14 ★ 09 2006

### அமரர் கதிரவேலு மகாதேவா

(ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
திதி: ஸப்தமி

அருமை அப்பாவே!
உங்களுக்காகவே வாழ்வேன்
உங்களை விட்டுப் போகமாட்டேன் என்றீர்களே
அப்பா நீங்கள் கனவாகிப்போன மாயம் என்ன?

"அன்னை இல்லம்",
மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

உங்கள் பிரிவுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**
(64217)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 11 ★ 08 ★ 1943

அன்னை அடியில் 24 ★ 07 ★ 2007

"நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவு இருக்கும்"

### அமரர் சிவபாதம் சிவதாசன்

(முன்னாள் புகையிலைக் கூட்டுத்தாபன முகாமையாளரும், தற்போதைய பம்பலப்பிட்டி சரஸ்வதி லொட்ஜ் பங்காளரும்)

புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்தவரும் இணுவிலைப் பிறப்பிடமாகவும் நாரஹேன்பிட்டியவில் வசித்தவருமான எமது குடும்பத்தின் குலவிளக்கு சென்னையில் அகால மரணமடைந்த வேளையில் இருந்து இன்றுவரை எமக்கு மனமார ஒத்தாசைகள் புரிந்துவரும் எமது பங்காளர்களுக்கும், அவரது செய்தி கேட்டு வெளிநாடுகளில் இருந்தும் யாழ். மண்ணிலிருந்தும் விரைந்து வந்து எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் தந்த எமது இரத்த உறவுகளுக்கும், உற்ற நேரத்தில் உதவிய, எமது உள்ளங்களை ஆசுவாசப்படுத்திய அயலவர்களுக்கும், உற்றார், உறவினர் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம், ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும், அவ்வமயம் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (04.09.2007) செவ்வாய்க்கிழமை அவரது அந்தியேட்டிக் கிரியைகள் கொழும்பு முகத்துவாரத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 06.09.2007 வியாழன் அவரது வீட்டிலும் நடைபெறும்.

மேலும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நாரஹென்பிட்டி சன சமூக மண்டபத்தில் (Community Hall) நிகழ இருப்பதால் அதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

C 2/7, அன்டர்சன் தொடர்மாடி,
பார்க் வீதி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு - 05.
தொ.பே. 2590951.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், உடன் பிறந்தோர்.
(64435)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். குமாரவேற்பிள்ளை இதில் கலந்துகொள்ளவுள்ளார். (203)

* * *

பண்ணாகம் மெய்கண்டான் ம. வி. பரிசு நாளும் நிறுவுநர் தினமும் நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் கந்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் க. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.

* * *

அச்சுவேலி வடக்கு கதிரொளி முன்பள்ளிக் கழகம் நடத்தும் கதிரொளி முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று பிற்பகல் ஒருமணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கு. றாஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதன் ஜெகதீசன் கலந்துகொள்வார்.

* * *

வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான இலவச சித்த மருத்துவப் பரிசோதனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொத்தணியின் கலையரங்க மண்டபத்தில் தலைவர் இ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த இலவச மருத்துவப் பரிசோதனையில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள விரும்புவோரை தங்கள் பிரதேசத்தில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நாளை மறுதினம் புதன்கிழமை பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

* * *

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று திங்கட்கிழமை தென்மராட்சி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாதாரண தரத்தில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (203-207)

* * *

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நெறிகளின் புதிய வகுப்புகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இணுவில், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வார, வார இறுதி நாள்கள் பயிற்சிகள் யாவும் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன என்று நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார். (203)


## சைக்கிள் விற்பனைக்கு

பெண்களுக்கான சைக்கிள் லுமாலா ஒன்றும் ஆண்களுக்கான சைக்கிள் லுமாலா இரண்டும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு
59, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(64432)


## கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்



### அருட்தந்தை B.F.பொனிபஸ்

அன்புப் பங்குத் தந்தையே!

19.08.2007 உமது கடைசி ஞாயிறு திருப்பலியை தவசிகுளம் காணிக்கை மாதா தேவாலயத்தில் காலை 9 மணிக்கு ஒப்பு கொடுத்தீரே. பின் எமது வீட்டிற்கு வந்து எம்குடும்பத்தாருடன் சரளமாய் பேசிச் சென்றீரே! 27.08.2007 பிற்பகல் 2 மணியளவில் உமது மரணச் செய்தி கேட்டு கதறி அழுதோம்; அதிர்ச்சி அடைந்தோம் இறைவா!

இவர் பிரிவால் துயருறும் தாய், சகோதரர்கள், உற்றார், நண்பர்கள், குருக்கள், துறவியர் அனைவருக்கும் உம் இரக்கத்தை காட்டியருளும்.

இவர் இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் சேர்க்கப்படுவாராக!

தவசிகுளம் காணிக்கை மாதா பங்கைச் சேர்ந்த ...
... பிருந்தவில்.


## பதவி வெற்றிடம்

A/L எடுத்துவிட்டீர்களா ....?
அடுத்தது என்ன .... ?

கவலையை விடுங்கள்
உங்களுக்கான அரிய சலுகைகளுடனான வேலை வாய்ப்பு

★ செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட், சுன்னாகம் கிளைக்கான விற்பனை ஆலோசகர்களுக்கான பதவி வெற்றிடங்கள்.

**தகைமைகள்:**
G.C.E. (O/L) சித்தி (கணிதபாடம் உட்பட 6பாடம் சித்தி)

**மேலதிக தகைமைகள்:**
கணனி அறிவு விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 05.09.2007 (புதன்கிழமை) காலை 9 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

Note: ★ ...
★ தகைமைக்கேற்ற வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
222 8074,
0779688292,
0779950090.

செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி,
145, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
(64440)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

912 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 17 43 45 46

31-08-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5146794 - 5161121

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 299,959 | 10/- | 2,999,590/- |
| 2 இலக்கங்கள் | 27,584 | 20/- | 551,680/- |
| 1 இல. + லக்கினம் | 27,169 | 30/- | 815,070/- |
| 2 இல. + லக்கினம் | 2,503 | 100/- | 250,300/- |
| 3 இலக்கங்கள் | 741 | 500/- | 370,500/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 5,000/- | 295,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 6,482,140/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 358,023 | | 7,505,640/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 4269713 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 செப்டம்பர் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 5147418-9-55 |
| அனுராதபுரம் | 5157071-9-83 |
| மாத்தளை | 5153696-8-56 |
| மட்டக்களப்பு | 5152677-8-83 |
| இரத்தினபுரி | 5151104-3-43 |

## பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 30 ஆவது ஆண்டை நோக்கி...

### Alliance Francaise de Jaffna

83, Palaly Road, Kantharmadam.
jaffna. Srilanka. Phone : 021 222 8093
Email : alliance jaffna@yahoo.com.

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

இக்கல்வி இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தினதும் பிரெஞ்சு அமைச்சினதும் பரிஸ் Alliance Francaise சர்வதேச அமைப்பினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரத்திலான DELF பரீட்சைக்கு தோற்றமுடியும்.
(150 மணித்தியாலங்கள் நிறைவு செய்தபின்)

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் மேற்கொள்ளும் பிரெஞ்சு மொழிப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். (60 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்தபின் Foundation Intermediary)

**புதிய பிரிவு**

மொழி பயிலும் ஆர்வமுள்ள அனைவருக்குமான தொடக்க நிலை வகுப்புக்கள் 08.09.2007 (சனிக்கிழமை) அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். வேறுவிவரங்களை நேரில் தொலைபேசியின் ஊடாகக் கேட்டறியலாம்.

தொடர்பு: தினமும் காலை 9 -12 வரை, பிற்பகல் 3 - 5 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல் : 222 3944

# இனப்பிரச்சினையை வைத்து நடத்தப்படும் அதிகாரப் போர்

*"தமிழரின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலம் காலமாகத் தமக்கிடையே அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றார்கள். இப் போர்கள் மூலமே தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைப்படுத்தி, பலப்படுத்த முனைந்துள்ளார்கள். இந்த அதிகாரப் போர்களும், அதன் விளைவாகத் தமிழரின் இனப்பிரச்சினையும் தீர்க்கப்படாது மேலும் மேலும் சிக்கலடைந்த காரணத்தாலேயே சமாதான முயற்சிகள் காலங்காலமாகத் தோல்வியில் முடிவடைந்தன."*

- இவை புலிகளின் மதியுரைஞர், 'தேசத்தின் குரல்' அமரர் அன்ரன் பாலசிங்கம் தமது கடைசி நூலான 'போரும் சமாதானமும்' என்ற புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் குறிப்பிட்ட வாசகங்களாகும்.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் பதவிப் போட்டா போட்டிக்கு தமிழரின் இனப்பிரச்சினை மையமாகும் மற்றொரு சந்தர்ப்பத்தை மீண்டும் ஒரு முறை நாம் தரிசிக்கும் இச்சமயத்தில், அதற்குப் பொருந்திப் போகும் அவ்வாசகங்களை மீள உருப் போட்டுப் பார்ப்பது பொருத்தமானது.

அரசுத் தரப்பின் ஊழல்கள் தொடர்பான 'கோப்' அறிக்கை, 'மிக்' விமானக் கொள்வனவு ஊழல், ரெலிக்கொம் பங்குமாற்ற விவகாரம், 107 அமைச்சர்களை நியமித்த குளறுபடி, வர்த்தக வங்கிளிடம் இருந்து 5 ஆயிரத்து 600 கோடி ரூபாவைக் கடன் வாங்கும் பொருத்தமற்ற திட்டம் போன்றவற்றை முன்வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், மங்கள சமரவீரவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவும் கூட்டு முயற்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றன.

அரச தரப்பை ஆட்சியிலிருந்து கவிழ்க்க எத்தனிக்கும் விதத்தில் சிங்கள ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான புதியதொரு அதிகாரப் போருக்கு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சி வித்திட்டிருக்கின்றது.

இனி என்ன, சிங்கள ஆளும் தரப்பின் இந்த அதிகாரப் போருக்கான மையமாக, மதியுரைஞர் பாலா குறிப்பிட்டமை போல தமிழரின் தேசிய இனப்பிரச்சினையே பயன்படுத்தப்படப்போகிறது என்பது திண்ணம்.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைக்காக அல்லாடிக்கொண்டிருக்கின்றது ஜனாதிபதி மஹிந்தரின் அரசு. சிறுபான்மையினரான தமிழர்களின் - குறிப்பாக மலையகத் தமிழர்களின் - கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் எச்சமயத்திலும் அரசுத் தரப்பின் காலை வாரலாம் என்ற அச்சம் அரசுக்கு இல்லாமல் இல்லை.

அதேசமயம், ஐ. தே. கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டோரில் கணிசமான எண்ணிக்கையானோரும் - ஏன் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பழைய தூண்களான பல அமைச்சர்களும் கூட - தற்போதைய அரசுத் தலைமையின் போக்கு, அரசுக்குள் தாங்கள் நடத்தப்படும் விதம், தங்களின் மீது 'ராஜபக்ஷ பிறதர்ஸ் அன்ட் கம்பனி' அளவுக்கு மீறிச் செலுத்தும் அதிகாரம் ஆகியவை காரணமாக அதிருப்தியும் விசனமும் அடைந்திருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது. பொருத்தமான சமயம் வரும்போது அரசின் காலை வாரக் காத்திருக்கும் இவர்களுக்கு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு வாய்ப்பை அளித்து விடக்கூடிய சந்தர்ப்பமும் உள்ளது.

இந்தப் பிரச்சினைகளிலிருந்து மீளுவதாயின் - நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சியை ஒரேயடியாக முறியடிப்பதாயின் - இந்தப் பிரேரணைக்கு எதிராகவும், இது விடயத்தில் அரசுக்கு ஆதரவாகவும் பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளை அணி திரட்டி, அரசுப் பக்கத்துத் தூண்களாக அவற்றை நிறுத்துவதுதான் இலகுவான வழி என்பது அரசுத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இன்றைய நிலையில், இவ்விவகாரத்தில் பௌத்த - சிங்கள மேலாண்மை சக்திகளான ஜே. வி. பியையும், ஜாதிக ஹெல உறுமயவையும் அரசுத் தலைமை தன் பக்கம் வளைத்துத் தனது கைகளுக்குள் அடக்கிக் கொள்ளுமாயின் நம்பிக்கையில்லாப் பிரேரணை எத்தனத்தை அடியோடு உதாசீனப்படுத்தித் தோற்கடிப்பது அரசுத் தரப்புக்கு துச்சமாகிவிடும்.

இந்த இரு அணிகளையும் இவ்விடயத்தில் தன் பக்கம் வளைத்துப் போடவே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைப் பகடைக் காயாக்கப் போகின்றது அரசுத் தலைமை.

இந்த இரு கட்சிகளையும் ஜனாதிபதி மஹிந்தவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் தவிர ஏனைய பெரும்பாலான கட்சிகள் அனைத்தும், இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையில் 'நாட்டின் உத்தேச புதிய அரசமைப்பு ஒற்றை ஆட்சியை வலியுறுத்தக்கூடாது' என்ற நிலைப்பாட்டை, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் ஊடாக வெளிப்படுத்தி நிற்கின்றன. அவற்றின் இந்த நிலைப்பாடு காரணமாக - விட்டுக்கொடுப்புக் காரணமாக - தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான ஒளிக்கீற்று தென்படுவதாக சிலர் நம்பத் தலைப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் -

மேற்படி ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்ற பௌத்த - சிங்களக் கடும் கோட்பாட்டாளர்களின் கட்சிகளைத் தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சியில் தன்னுடன் ஒன்றிணைப்பதற்காக, அந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டத்தை தனது துரும்பாக அரசுத் தலைமை பயன்படுத்தப் போகின்றது எனத் தெரியவருகின்றது.

மேற்படி இரு பேரினவாதக் கட்சிகளின் விருப்புப்படி 'ஒற்றையாட்சி' முறை நீக்கப்படமாட்டாது என்று பிடிவாத நிலைப்பாட்டை அரசு எடுக்கவும் -

அதற்குக் கைமாறாக, நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் அரசுத் தரப்பை இவ்விரு கட்சிகளும் காப்பாற்றி காபந்து பண்ணவும் -

எழுதப்படாத ஒரு கனவான் உடன்பாடு - புரிந்துணர்வு - சம்பந்தப்பட்ட பேரினவாதக் கட்சிகளுக்கும் அரசுத் தலைமைக்கும் இடையே உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் துரும்பாகப் பயன்படுத்தி, அதற்காக உருவாகக் கூடிய தீர்வு யோசனையை, அரசையும் ஆட்சியையும் காப்பாற்றும் அதிகாரப் போட்டிக்கு பலிகொடுத்து, ஆட்சிப் போட்டிக்கு இனப்பிரச்சினையை மையமாகப் பயன்படுத்தும் மற்றொரு அத்தியாயத்தை அரங்கேற்ற கொழும்பு தயாராகி வருகிறது.

# யாழ். மருத்துவப் பட்டதாரிகள் பயிற்சிக்காக இங்கு தங்கவேண்டிய கடப்பாடு உடையவர்கள்

## துணைவேந்தரும் மருத்துவ பீடாதிபதியும் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.மருத்துவ பட்டதாரிகள்,உள்ளகப் பயிற்சிக்காக இங்கு தங்கவேண்டிய கடப்பாடு உடையவர்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையை மறுத்து அதிலும் தரங்குறைந்த பின்தங்கிய தென்பகுதி வைத்தியசாலைகளுக்குச் செல்வதை மேற்படிப்புக்காக என எப்படிக் கூறமுடியும்?

உள்ளகப் பயிற்சியாளர்கள் உதவப்போவது இவர்கள் கற்பதற்காக தம்மை வருத்திய யாழ்ப்பாண நோயாளருக்கும் தற்போதைய மாணவருக்குமே.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகபதில் துணைவேந்தர் இ.குமாரவடிவேலும் மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி க.சிவபாலனும் யாழ். மருத்துவப் பட்டதாரிகளின் உள்ளகப் பயிற்சி குறித்து நேற்றுக் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மருத்துவப் பட்டதாரிகள் இப்போது விவாதத்தின் மையமாக உள்ளனர். உள்ளகப் பயிற்சிக்காக அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ள வைத்தியசாலைகளை நாடுவதும் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான உள்ளகப் பயிற்சியாளர்களை நியமிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் இவ்விவாதங்களை உருவாக்கியுள்ளன. நாம் எமது பட்டதாரிகளிடமும் அவர்களின் பெற்றோரிடமும் தமது பிரயாசங்களுக்கான விளைவை நாடுமுன் அவர்களை வைத்தியராக்க ஏனையோர் செய்த தியாகங்களை நினைத்துப் பார்க்கவும் அந்நன்றிக் கடனை மீளச் செலுத்தவும் வேண்டுகிறோம்.

### முந்திய நிலை இப்போது இல்லை

ஐந்து வருடங்களின் முன் மருத்துவ மாணவ காலம் 9-10 வருடங்களாக இருந்தது. இது மருத்துவ பீடத்தில் ஆசிரியர் பற்றாக்குறை, வைத்தியசாலையில் விசேட வைத்தியர் இன்மை மற்றும் போர் காரணமாக நீண்டகாலம் கற்றல் தடைப்பட்டமை போன்றவற்றால் ஏற்பட்டது. அப்போது வெளியேறிய மருத்துவர் ஏனைய பீடங்களிலிருந்த தமது சகபாடிகளை விட ஒரு வருடம் பிந்தி தமக்கு அடுத்த தொகுதி மாணவருடனேயே நியமிக்கப்பட்டனர்.

இந்நிலை இப்போது இல்லை. மருத்துவ மாணவ காலம் அண்ணளவாக ஆறு வருடங்களாகக் குறைக்கப்பட்டு, தமது சகபாடிகளுடன் உள்ளகப் பயிற்சிக்கு எமது பட்டதாரிகள் நியமிக்கப்படுகின்றனர். மருத்துவ பீடத்தில் இளைப்பாறுதல், கற்றல் விடுப்பு மற்றும் கடமை விலகல் போன்ற காரணங்களால் ஆசிரியர் எண்ணிக்கை குறைந்துவரும் நிலையிலும் இச்சாதனை நிகழ்ந்துள்ளது.

### யாழ்.போதனா வைத்தியசாலையின் பெரும் பங்களிப்பு

மாணவ காலத்தைக் குறைப்பதிலும் இலங்கையின் ஏனைய பீடங்களின் பட்டதாரிகளுக்கு இணையான அல்லது அவர்களிலும் திறமையான மருத்துவர்களை உருவாக்குவதிலும் போதனா வைத்தியசாலை பாரிய பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. அங்குள்ள விசேட வைத்தியர்கள் தமது கடமைக்கு மேலதிகமாக மருத்துவ பீட ஆசிரியர் செய்யவேண்டிய கற்பித்தலையும் மருத்துவ பீட நோயாளர் விடுதிகளைப் பராமரிப்பதையும் செய்து வருகின்றனர்.

அதற்கும் மேலாக எமது இறுதிப் பரீட்சைகளையும் தென்னக பரீட்சகர்களை வருவித்து நடத்துகின்றனர். அவ்வாறு வரும் பரீட்சகர் எமது பட்டதாரிகளின் தரத்துக்குச் சாட்சிகளாக உள்ளனர். எமது விசேட வைத்தியர் திறமைப்பட்டியல் தயாரிப்பதற்கான பொதுப் பரீட்சை 'பல்தெரிவு' வினாக்களைத் தயாரிக்கும் குழுக்களிலும் ஏனைய பீட பேராசிரியர்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இத்தகைய மாணவருக்கான பொறுப்புக்கள், அவர்களின் சொந்த வாழ்க்கைக் கும் மேலதிக உழைப்புக்குமான நேரத்தைக் குறைக்க நிர்ப்பந்தித்துள்ளன.

கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாமல் சிக்கலான காலத்தில் எமது மாணவர்களின் கல்வி தடைப்படாமல் தொடர்வதற்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும் போதனா வைத்தியசாலை பெரும் பங்காற்றியுள்ளது. கடந்த வருடம் உணவுத் தட்டுப்பாடு நிலவியபோது இறுதியாண்டு மாணவருக்கு தமது சிரமங்களைப் பொறுத்துக்கொண்டு தமது உணவுச் சாலையில் உணவு பெற ஏற்பாடு செய்தமையை யாரும் மறக்கமுடியாது. போதனா வைத்தியசாலையின் வற்புறுத்தலும் ஆதரவும் இல்லாதிருந்தால் இப்போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறத் துடிக்கும் பட்டதாரிகள் அப்போது வீடு சென்று இப்போதும் கல்வியை முடிக்காதவர்களாக இருந்திருப்பார்கள்.

### உள்ளகப் பயிற்சியாளரை நியமிக்கக் கோருவது ஏன்?

விசேட வைத்தியர்கள் உரிய எண்ணிக்கையில் உள்ளகப் பயிற்சியாளர் நியமிக்கப்படவேண்டுமெனக் கோருவது கற்பித்தலுக்குத் தேவையான நேரத்தைப் பெற்றுக்கொள்ளவே. அவர்கள் தமது முதற் கடமையான நோயாளர் பராமரிப்பை புறக்கணித்து கற்பித்தலில் ஈடுபட முடியாது. அவர்கள் நம்பக்கூடிய இளம் வைத்தியர் இருந்தால் மட்டுமே பொறுப்புக்களை பகிர்ந்தளித்துவிட்டு தற்போதைய மாணவருக்குக் கற்பிக்கமுடியும். உண்மையில் உள்ளகப் பயிற்சியாளர் உதவுவது இவர்கள் கற்பதற்காக தம்மை வருத்திய யாழ்ப்பாண நோயாளருக்கும் தற்போதைய மாணவருக்குமே.

யாழ்ப்பாணத்தில் உள்ளகப் பயிற்சியாளராகக் கடமையாற்றக் கோரும் ஒரு வருடம் போதனா வைத்தியசாலையும் விசேட வைத்தியரும் எமது ஆசிரியரும் இணைந்து மாணவர்களுக்கு மீதப்படுத்திய காலத்தின் ஒரு சிறு பகுதி மட்டுமே. சிக்கலான இக்காலகட்டத்தில் யாழ். வந்து சேவையாற்றுவதுடன் உற்சாகமாக கற்பித்து இவர்களை உருவாக்கிய இளம் விசேட வைத்தியர்களிடம் இந்த இளம் பட்டதாரிகள் சிறிய அளவிலேனும் கற்றுக்கொள்ளவேண்டும்.

### உள்ளகப் பயிற்சியை முடித்த பின்னரே மேற்படிப்பு சாத்தியம்

சிலர் மேற்படிப்புக்கான வாய்ப்புக்களை இழக்கவேண்டுமே என விவாதிக்கின்றனர். உண்மையில் பட்டதாரிகள் உள்ளகப் பயிற்சி முடித்த பின்னரே முழுமையான தகுதி அடைகின்றனர். அதன் பின்னரே மேற்படிப்புக்கான ஆயத்தங்களில் ஈடுபடமுடியும். எந்த ஒரு பட்டதாரியாவது யாழ். வைத்திய சாலையை விட மேல்நிலையிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்ல விரும்புவதை விளங்கிக் கொள்ள முடியும். யாழ்.போதனா வைத்திய சாலையை மறுத்து அதிலும் தரம் குறைந்த பின்தங்கிய தென்பகுதி வைத்தியசாலைகளுக்குச் செல்வதை மேற்படிப்புக்காக என எப்படிக் கூற முடியும்? யாழ். வைத்தியசாலையிலிருந்து பலர் மேற்படிப்புக்குத் தெரிவாகிச் சென்றுள்ளனர்.

• யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலை ஏற்புடையதல்ல என்பது வைத்தியர்களுக்குப் பொருந்தாது. யாழ்ப்பாணத்திலேயே அதிக பாதுகாப்பான இடம் போதனா வைத்தியசாலை. உள்ளகப் பயிற்சியாளருக்கு வைத்திய சாலையினுள் அல்லது வீதியின் மறு பக்கத்தில் தங்கும் வசதி உள்ளது.

மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொண்டால் யாழ்ப்பாணப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளகப் பயிற்சிக்காகத் தங்கவேண்டிய கடப்பாடு உள்ளவர்கள் என்பது தெளிவாகும். அதன் பின் அவர்கள் தமது மேன்மைக்கான வழியைத் தேடலாம். மேலும் மேற்படிப்பில் உடனடி நாட்டம் இல்லாதோர் தம்மை வளர்த்து உயர்கல்விக்கான வாய்ப்பளித்த தமது பிரதேச மக்களுக்காக அங்குள்ள வைத்தியசாலைகளில் குறைந்தது இரண்டு வருடங்களாவது கடமையாற்ற முன்வரவேண்டும். - என்றுள்ளது.

(அ-1)

# அமைச்சரின் முடிவு செயற்படுத்தப்பட்டால் அரச மருத்துவர் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு,செப்.3

தமிழ் மருத்துவ மாணவர் வடக்கு - கிழக்கில் பணியாற்றவேண்டும் என்ற சுகாதார அமைச்சின் முன்மொழிவு செயற்படுத்தப்பட்டால் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுவோம்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இவ்வாறு நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் செயலாளர் டாக்டர் அனுருத்த பாதிணிய விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வைத்தியர்கள் நாடு முழுவதுமாக அத்தியாவசிய சேவையை வழங்குகின்றனர். வைத்தியர்களின் நியமனம் மற்றும் இடமாற்றம் இன, மத மற்றும் அரசியல் ரீதியான எந்தவித தலையீடும் இன்றி அவர்களது திறமை நிரலின் அடிப்படையில் மட்டுமே நிகழ்ந்து வருகின்றது. இது மற்றைய துறைகளுக்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆனால் தமிழ் வைத்தியர்கள் அவர்களது திறமை நிரல் நிலை கருத்திக் கொள்ளப்படாது வடக்கு மற்றும் கிழக்கில் மட்டுமே பணியாற்ற வேண்டுமென்ற அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா முன்வைத்திருக்கின்றார். தமிழ் வைத்தியர்கள் கொழும்பு மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் பணியாற்றும் வாய்ப்பை இல்லாமல் செய்யும் இந்த நகர்வை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

### பொது மக்களை ஏமாற்ற முனையும் செயல்

இதேவேளை சிந்தனையற்ற குறுகிய பார்வை கொண்ட இந்த முடிவை எடுப்பதில் அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கமும் பங்குகொண்டதாக அமைச்சர் ஊடகங்களுக்கு தகவல் கொடுத்துள்ளார். இது இப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களையும் பொதுமக்களையும் ஏமாற்ற முனையும் செயலாகும்.

சுகாதாரத் துறையை சீர்குலைக்கும் புறக்கணிப்புச் செய்யும் இந்த முன்மொழிவை எதிர்ப்பதுடன் முன்னைய திறமை நிரலின் அடிப்படையிலான நியமன முறையை பின்பற்ற உதவுமாறு நாட்டின் நலனை தமது எண்ணமாகக் கொண்ட அனைத்து அமைச்சர்களையும் வேண்டுகின்றோம்.

மருத்துவ மாணவர்கள் அவர்களது பெற்றோர்களுக்கு உணர்வுபூர்வமாக இத்தீர்மானத்தை எதிர்த்த நற்சிந்தனை கொண்ட நாட்டு மக்களுக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.

எமது இந்த எதிர்ப்பு கவனத்தில் கொள்ளப்படாது அமைச்சரின் முன்மொழிவு முன்நகர்த்தப்பட்டால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வருத்தத்திற்குரிய தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுவர் - என்றுள்ளது.

(அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 18 | செவ்வாய்க்கிழமை 04.09.2007 |
| திதி : அட்டமி | முன்னிரவு 11.23 |
| நட்சத்திரம் : | ரோகிணி மு.இ. 11.11 |
| சுபநேரம் | : 10.35 - 12.05 |
| ராகுகாலம் | : 03.05 - 04.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக்கட்சியின் 56ஆவது மாநாட்டில் ஜனாதிபதி

# கிழக்கை மீட்டது போன்று வடக்கில் மன்னாரிலும் ஒரு பகுதியை மீட்டுள்ளோம்

## பிரபாகரன் இனி முடங்கவேண்டியதுதான்

கொழும்பு,செப்.3

அண்மையில் கிழக்கை எமது படையினர் மீட்டெடுத்தது போல் தற்போது மன்னாரிலும் சில பகுதிகளை மீட்டிருக்கின்றனர். தற்போது பிரபாகரன் வடக்கில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள் ஒடுங்கவேண் டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

-இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 56 ஆவது வருடாந்த மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் இவர்கள் அரசியலில் வளரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு பாரிய விருட்சம். அதிலிருந்து இரண்டு பேரோ அல்லது ஒருசிலரோ சென்றாலும் அது உடைந்து- முறிந்து வீழ்ந்துவிடாது. இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் சொந்தமான ஒரு கட்சி இதுவாகும்.

பண்டாரநாயக்கா பரம்பரையோ ராஜபக்ஷ குடும்பத்தினரோ இதற்குச் சொந்தக்காரர்கள் அல்லர். இது மக்களுக்குச் சொந்தமான கட்சி.

நாட்டில் ஐக்கியமும் சமாதானமும் நிலவவேண்டும் என்பதற்காகவே நாம் படை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார்.

இதேவேளை, இந்த மாநாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அவர் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சீனாவுக்கு பயணம்

கொழும்பு,செப்.3

ஜே.வி.பியின் பிரதிநிதிகள் சிலர் சீன அரசின் அழைப்பின் பேரில் 12 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற் கொண்டு நேற்று முற்பகல் அங்கு பயண மாகினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவசன்ஸ, ஜெயந்த விஜயசேகர, ஜெயந்த சமரவீர, ஜனதாச கித்துல்கொட மற்றும் ஜயவீர பத்திரன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# அரச சார்பு குழுக்களினால் எனக்கு பெரும் ஆபத்து

## இக்பால் அத்தாஸ் கூறுகிறார்

கொழும்பு,செப்.3

சிறிலங்கா இராணுவத்தினர் என்னைக் கடத்துவதற்கு முன்னர் முயற்சித்தனர். இப்போது அரச சார்பான குழுவினர் எனது வீட்டுக்கு வெளியில் நடமாடுவதால் ஆபத்துகள் அதிகரித்துள்ளன.

பிரபல ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸ் இப்படிக் கூறியுள்ளார்.

'த நேசன்' என்ற ஆங்கில வார ஏட்டுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்த முக்கிய அம்சம் வருமாறு -

எனது பாதுகாப்பை அகற்றியதற்காக என்னால் அவர்களுடன் வாதாட முடியாது. எனக்கு பிரத்தியேக பாதுகாப்பு வழங்குமாறு நான் அவர்களை நிர்ப்பந்திக்கவும் முடியாது. ஆனால் மறுபுறம் அரச சார்பான குழுவினர் எனது வீட்டிற்கு வெளியில் நடமாடுவதால் ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன.

மேலும் நான் தெரிவிக்கும் மேலதிக விடயங்கள் அரசுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துமான இருந்தால் என்னுடன் தனிப்பட்ட முறையில் அதனைப் பேசுவதுடன் அப்படி எழுதவேண்டாம் எனவும் கூறலாம். நான் அவர்களின் கருத்துக்களைக் கேட்பதற்குத் தயாராகவே உள்ளேன். ஆனால் இப்படியான அணுகுமுறைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (1)

### அரசுப் படைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாகத் தொடர்புபட்டனவல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதான தளப்பரப்பையும் இதுவரை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிலாவத்துறை மற்றும் அதை அண்டிய பகுதியையும் தெளிவாகப் பிரித்து ஊடறுக்கும் வகையில் அரச படைகளில் கட்டுப்பாட்டுப் பிரதேசம் இருந்து வருகிறது. இந்தப் பகுதி ஊடாகவே அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா - மன்னார் வீதி செல்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, தமது வன்னிப் பெரு நிலப் பரப்பிலிருந்து தெளிவான தரைவழி வீதியோரப் பாதை இல்லாத ஒரு பிரதேசத்தின் மீதான கட்டுப்பாட்டையே புலிகள் இழந்திருக்கின்றார்கள் என்று புலிகள் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

#### கடற்புலிகளின் இறங்குதுறை கைப்பற்றப்பட்டுள்ளது

சிலாவத்துறையைக் கைப்பற்றும் படை நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படையினரும் கடற்படையினரும் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படை நடவடிக்கையின் இடையே சிக்கி, சுமார் ஏழாயிரம் பொதுமக்கள் இப்பிரதேசத்தல் இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

சிலாவத்துறையில் கடற் புலிகளின் இறங்குதுறைப் பகுதி கைப்பற்றப்பட்டிருப்பதால் மேற்குக் கடலில் கடற் புலிகளின் பிரசன்னத்தை ஓரளவு குறைக்க முடியும் என்று கொழும்பில் படை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (சி)

### விமானப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் தொகுதி பயணிகள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இன்று கூட்டிச் செல்லப்படுவர் என்றும் -

பயணம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுப் பெறுதல் போன்ற விவரங்கள் இன்று வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-1)

### பசுந்தென்றல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள், 5 பெண்கள் உட்பட 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. சடலங்களின் தலைகளிலேயே காயங்கள் காணப்பட்டன.

இச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் சிலாவத்துறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த வானின் சாரதி அங்கு உயிரிழந்த அவரின் சடலமும் நேற்று மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டது.

மன்னார் ஆஸ்பத்திரிக்கு நேற்றிரவு 8 மணிக்கு சடலங்கள் எடுத்துவரப்பட்டன.

மன்னார் நீதிவான் எஸ்.பிரபாகரன் வைத்தியசாலையில் சடலங்களைப் பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டார். அச்சடலங்களை அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

சடலங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின் உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலங்களை புதைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மரண விசாரணைகளை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-1)

### காணாமற்போனோர் தொடர்பாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மக்களைத் துன்புறுத்தும் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றது, எனவே, யுத்தத்தில் இவையெல்லாம் தவிர்க்க முடியாதவை என்று தமது செயற்பாட்டுக்கு நியாயம் கற்பிக்கின்றார் கோத்தபாய

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு வேண்டுமானால் அவ்வாறு செயற்படுவதற்கு அவரின் செனட் சபை அவருக்கு அதிகாரம் வழங்கியிருக்கலாம்.

#### அப்பட்டமான பொய்கள்

ஆனால் இங்கு அப்படிச் செயற்படுவதற்கு கோத்தபாயவுக்கு யாரும் அதிகாரம் அளிக்கவில்லை.

காணாமற்போனோர் எனக் கூறப்பட்டவர்கள் வெளிநாடு சென்று திரும்பிவிட்டனர் என்று பிரதமர் கூறுகின்றார்.

காணாமற் போனோர் பலர் திரும்பி வந்துவிட்டனர் என்று இது குறித்து விசாரிக்க அரசு நியமித்த தனிநபர் ஆணைக்குழுவும் கூறுகின்றது.

இவையெல்லாம் தவறான - அப்பட்டமான பொய்க்கூற்றுக்கள் என நாம் அவற்றை நிராகரித்து மறுக்கின்றோம்.

நாங்கள் காணாமற்போன 82 பேரின் பெயர் விவரம் அடங்கிய பட்டியலை அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். ஆள்களைக் கடத்தி கப்பம் அறவிட்டமை தொடர்பாக - கப்ப அறவீட்டுத் தொகை வங்கிகளில் வைப்பிலிட்டமை சம்பந்தமான - ரசீதுகளையும் நாம் ஒப்படைந்திருக்கின்றோம்.

இவர்களும் வெளிநாடுகளுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்துவிட்டார்களா? மீண்டு வந்துவிட்டார்களா? அப்படியாயின் எப்போது, எந்தக் கடவுச்சீட்டில் வந்தார்கள் என்பதை அரசால் அறிவிக்க முடியுமா?

ஆள்கள் கடத்தப்படுகின்றமை தொடர்பாகப் பொய்ப் பிரசாரம் செய்வோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் எனப் பிரதமர் கூறியிருக்கின்றார்.

#### துணிவிருந்தால் எம்மீது நடவடிக்கை எடுங்கள்

இப்போது நாம் ஆள்கடத்தல்களை அம்பலப்படுத்துகின்றோம். துணிவிருந்தால் அரசு எம்மீது நடவடிக்கை எடுத்துப் பார்க்கட்டும்.

இதுவரை காலமும் ஆட்கள் காணாமற் போதல் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களையே நாம் முன்னெடுத்தோம். ஆனால் அவற்றால் பயன் ஏற்படவில்லை.

எனவே, காணாமற்போனோர் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்வதன் மூலம் அரசின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போகின்றோம்.

பூஸாவில் மட்டும் 300 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இவர்கள் யார்? இவர்கள் எதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்? இவர்கள் செய்த குற்றம் என்ன? - இவற்றைப் பகிரங்கப்படுத்த அரசு முன்வரவேண்டும்.

ஆள்கள் கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக படை அதிகாரி கஜநாயக்காவும் மற்றும் சில முன்னாள் படையினரும் கைது செய்யப்பட்டனர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது.

அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்? அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

கஜநாயக்க போன்றோர் கைது செய்யப்பட்டதை அடுத்து நாட்டில் அதுவரை இடம்பெற்ற பல காணாமற்போன சம்பவங்களுக்கு அவர்களே, முழுப் பொறுப்பாளிகளாக்கப்பட்டனர். படையிலிருந்த சிலரும் கஜநாயக்க போன்றோருமே மேற்படி கடத்தல்களை முன்னெடுத்தனர் என்றும் அரசுக்கும் அப்படி ஆள்கள் கடத்தப்பட்டமைக்கும் எந்தத் தொடர்புமேயில்லை என்றும் பிரதமர் அப்போது கூறினார்.

#### கதையைப் புரட்டுகிறார் பிரதமர்

ஆனால் இப்போது அவர் வேறு விதமாகக் கதையைப் புரட்டுகின்றார். காணாமற்போனவர்கள் என்று கூறப்பட்ட பலர் வெளிநாடு சென்று திரும்பிவிட்டனர் என்று ஜனாதிபதி மஹிந்தரும் பிரதமரும் இப்போது கூறுகின்றனர்.

ஏன் இப்படி முன்னுக்குப்பின் முரணாக கருத்து வெளியிடுகின்றார்கள்?

வடக்கில் பெரும் நடவடிக்கை எடுக்கும் எண்ணம் ஏதுமில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம வெளிநாடுகளில் சென்று கூறுகினறார். அங்கு நிதி உதவிகளைப் பெறவே இந்தக் கதை.

ஆனால் இங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அதற்கு முரணாகக் கூறுகின்றார். இந்த நாட்டு மக்கள் மீது பெரும் யுத்தம் ஒன்றை அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார். இதற்கான மக்கள் அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர் யுத்தப் பிரகடனம் செய்கின்றார்.

இப்படி அரசுக்குள் முரண்பாடுகள் முற்றி நிற்கின்றன.

இவை குறித்தெல்லாம் நாம் சர்வதேச சமூகத்துக்கும் ஜெனீவாவுக்கும் அறிவித்துள்ளோம். - என்றார் விக்கிரமபாகு கருணாரத்ன. (சி)

### மண்டபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அவர்கள் முகாமை விட்டு வெளியே போய்வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிலேயே இரு நூறு பேர் இப்போது மாயமாக மறைந்திருக்கிறார்கள் என்பது தெரியவந்திருக்கின்றது.

மண்டபத்துக்கு வெளியேபிற அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகளிடையேயும் திடீர் கணக்கெடுப்பு நடத்தி, அவர்களிலும் காணாமற்போனவர்கள் உள்ளனரா என்பது கண்டறியப் படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (சி)

தரம் 5 விசேட புலமைப் பரிசில் 2008
புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.09.2007 4.00PM
தரம் 3 பாடப்பரப்பு அடங்கலாக
ஆசிரியர்: N.சுபேசன்
IBS சுண்டுக்குளி

மானிப்பாயில் முதன் முதலில்
100% Practical Education !!!
After A/L??
Diploma in Computer Servicing Technician
Electronic Components Study
Digital Electronics
Practical Electronics (UPS, Power supply, Monitor, Printer)
Telecommunication
Trouble Shooting Guides
Computer Customizations
PC Assembling
Etc..
உங்கள் கணனிகளை 100% நீங்களே திருத்துவதற்கானதும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவில் தொழில் வாய்ப்பை 100% நீங்கள் பெற்றுக்கொள்வதற்கான தொழில்சார் கணனிக்கற்கைநெறி
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

ENGLISH SPOKEN AND GRAMMAR
BY: BRITTO
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05.09.2007
(புதன், வெள்ளி வகுப்புகள்)
நேரம்: காலை 8.30 இடம்: கொக்குவில்

நியூட்டன் அக்கடமி கோண்டாவில்
புதிய பிரிவு
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பிரபல ஆசிரியர்
BY: ஞானாகரன்
இன்று ஆரம்பம் 03.09.2007
MON. 3.30

ஞானோதயா அக்கடமி
சாவகச்சேரி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectures by: Mr. K. Nishanthan (Dip.in Eng.)
ஆரம்பம்: 04.09.2007 செவ்வாய்
★ பிரிவு I - At 1.30p.m (செவ், வியா)
★ பிரிவு II - At 9.30a.m (செவ், வெள்.)
குறிப்பு: குறுகிய காலத்தில் பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும். G.A.Q, B.A part I மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org